**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**
முன்னிலை : திருமதி.G.ஆனந்தி, எம்.ஏ., எம்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.

2021ம் வருடம் டிசம்பர் திங்கள் 01ம் நாள் புதன்கிழமை
**அ.வ.எண்.279/2021 இல் இ.ம.எண்.3/2021 இல் இ.ம.எண்.3/2021**

1.முத்து கருப்பன்
2.M.ராமநாதன் ... மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

/ எதிர் /

V.ராமநாதன் ... எதிர்மனுதாரர் / மனுதாரர் / வாதி

இம்மனுவானது கடந்த 17.11.2021 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.A.அதிபதி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.T.இளங்கோ அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரர்கள் / பிரதிவாதிகள் மற்றும் எதிர்மனுதாரர் / வாதி தரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

## ஆணையுரை

இம்மனுவானது, இ.ம.எண்.2/2021 மனுவில் 25.10.2021 தேதியில் மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7 மற்றும் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :</u>

மனுதாரர், மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு ஆதரவாக ஆஜராகியுள்ள வழக்கறிஞர். எதிர்மனுதாரர் / வாதி, மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா வழக்கினை தாக்கல் செய்து அதில் நீதிமன்ற அறிவிப்பு சார்பு செய்யப்பட்டிருந்த நிலையில், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் மேற்படி வழக்கில் ஆஜராக மனுதாரரான வழக்கறிஞருக்கு வக்காலத்து வழங்கியிருந்தனர். வழக்கில் 25.10.2021ம் தேதியில் இ.ம.எண்.02/2021 மனுவில் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளின் வருகைக்காக வாய்தா ஏற்பட்டிருந்தது. துரதிஷ்டவசமாக மேற்படி நாளில் பார் கவுன்சில் ஆப் தமிழ்நாடு, நீதிமன்ற புறக்கணிப்பை அறிவித்திருந்த காரணத்தால் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் சார்பாக மனுதாரரான வழக்கறிஞரால் நீதிமன்றத்தில் ஆஜராகி வக்காலத்தினை தாக்கல் செய்ய இயலவில்லை. மேலும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் வெளியூர் சென்றிருந்த காரணத்தால் அவர்களுக்கும் வழக்கில் ஆஜராக வேண்டிய தகவலை தெரிவிக்க முடியவில்லை. எனவே, எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜரில்லாததால் அவர்களுக்கு எதிராக ஒருதலை பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்கள் / பிரதிவாதிகள் வழக்கில் ஆஜராகாதது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்பதாலும், ஒரு தலைபட்ச உத்தரவை ரத்து செய்யாத பட்சத்தில் எதிர்மனுாரர்கள் / பிரதிவாதிகளுக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும் என்பதாலும், 25.10.2021 தேதியில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைப்பட்ச உத்தரவினை ரத்து செய்ய வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

3) <u>எதிர்மனுதாரர் / வாதியின் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u> :

மனுதாரர்கள் / பிரதிவாதிகளின் மனு பொய்யும், மோசடியானது என்பதால்

சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரர் / வாதி வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மனுவில் கண்டுள்ள மற்ற சங்கதிகளை மனுதாரர்கள் / பிரதிவாதிகளே நிரூபிக்க வேண்டும். நீதிமன்ற அறிவிப்பு கிடைத்தவுடன் மனுதாரர் / பிரதிவாதி வழக்கில் ஆஜராக வழக்கறிஞருக்கு வக்காலத்து கொடுத்ததாக கூறியுள்ளது பொய்யானது. 25.10.2021ம் தேதியில் வழக்கில் வாய்தா ஏற்பட்டது உண்மை. அதுபோல் அன்றைய தினம் வழக்கறிஞர்கள் நீதிமன்ற புறக்கணிப்பில் இருந்ததால் மனுதாரர் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராகி வக்காலத்து தாக்கல் செய்யவில்லை என்று கூறியுள்ளது பொய்யானது. அதுபோல் மேற்படி நாளில் மனுதாரர்கள் / பிரதிவாதிகள் வெளியூர் சென்றிருந்த காரணத்தால் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்று கூறியுள்ளதை மனுதாரர்கள் / பிரதிவாதிகளே நிரூபிக்க வேண்டும். அதன் காரணமாகவே மனுதாரர்கள் / பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜரில்லாததால் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி வருகை தராதது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்று கூறியுள்ளது பொய்யானது. மனுவில் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்திலும், மனுவிலும், வழக்கறிஞரே பிரமாணதாரராகவும், வழக்கறிஞராகவும் இருந்து கையொப்பம் செய்துள்ளது சட்டப்படி தவறானது என்பதால். மனு தள்ளுபடிக்குரியது. அதுபோல் வழக்கறிஞர்கள் நீதிமன்ற புறக்கணிப்பில் இருந்ததால் ஆஜராகவில்லை என்று கூறியுள்ளதும் சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்பதால் மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும். மனுவில் எவ்வித நியாயமும், இல்லாத காரணத்தால் மனுதாரர்கள் / பிரதிவாதிகள் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்பதால் மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**6)** இம்மனுவானது, இ.ம.எண்.2/2021 மனுவில் 25.10.2021 தேதியில் மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் / பிரதிவாதிகள், எதிர்மனுதாரர் / வாதி தரப்பில், சாட்சிகள் முன்னிலைப்படுத்தப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை. கற்றறிந்த இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதுரை கேட்கப்பட்டது.

7) மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் எதிர்மனுதாரர் / வாதியால் மனுதாரர்கள் / பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி வழக்கில் நீதிமன்ற அறிவிப்பு மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு சார்பு செய்யப்பட்டிருந்ததால் மேற்படி வழக்கில் ஆஜராக எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் வழக்கறிஞருக்கு வக்காலத்து வழங்கியிருந்ததாகவும், வழக்கில் 25.10.2021ம் தேதியில் பிரதிவாதிகள் வருகைக்காக இ.ம.எண்.2/2021ல் வாய்தா ஏற்படுத்தப்பட்டிருந்த சமயத்தில் வழக்கறிஞர்கள் நீதிமன்ற புறக்கணிப்பில் இருந்த காரணத்தால் வழக்கறிஞரால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்றும், மேலும் மனுதாரர்கள் / பிரதிவாதிகளும் வெளியூர் சென்றிருந்த காரணத்தால் அவர்களையும், நீதிமன்றத்தில் ஆஜராக தகவல் தெரிவிக்க இயலாத காரணத்தால் 25.10.2021ம் தேதியில் மனுதாரர்கள் / பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தால் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், மனுதாரர்கள் / பிரதிவாதிகள் வேண்டுமென்றே நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருக்கவில்லை என்பதாலும், மனுவினை அனுமதிக்காத பட்சத்தில் அது மனுதாரர்களுக்கு மிகுந்த பாதிப்பினை ஏற்படுத்தும் என்பதாலும் மனுவினை அனுமதிக்க வேண்டும் என்று வாதிட்டுள்ளார்.

8) எதிர்மனுதாரர் / வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மனுதாரர் வழக்கறிஞர் நிரூபண வாக்குமூலத்தின் பிரமாணதாரராக இருந்து மனுவினை தாக்கல் செய்துள்ளதால் மனு சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றும், தரப்பினருக்காக ஆஜராகும் ஒரு வழக்கறிஞரே அந்த வழக்கில் சாட்சியாக இருக்க இயலாது என்றும், மேலும், நீதிமன்ற அறிவிப்பு சார்பு செய்யப்பட்டவுடன் வக்காலத்து கொடுத்துள்ளதாக மனுதாரர்கள் / பிரதிவாதிகள் கூறியுள்ளதை மனுதாரர்கள் / பிரதிவாதிகளே நிரூபிக்க வேண்டும் என்றும், 25.10.2021ம் தேதியில் மனுதாரர்கள் / பிரதிவாதிகள் வெளியூர் சென்றிருந்ததாக கூறியுள்ள நிலையில் அது தொடர்பாக எந்த ஆவணமும் மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், 25.10.2021ம் தேதியில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைப்பட்ச உத்தரவினை ரத்துச் செய்யக் கோரி தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியுள்ள காரணங்கள் சட்டப்படி ஏற்கத்தக்க காரணங்கள் இல்லை என்றும், வழக்கறிஞர்கள் நீதிமன்ற புறக்கணிப்பில் இருந்ததால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்று கூறியுள்ளது சட்டப்படியாக ஏற்கத்தக்க காரணம் இல்லை என்றும், நீதிமன்ற புறக்கணிப்பு என்பது சரியென்று காட்டமுடியாத செயல் என்று உயர்நீதிமன்றம் வன்மையாக கண்டித்துள்ள நிலையில் வழக்கறிஞர்களின் நீதிமன்ற புறக்கணிப்பினால் வக்காலத்து தாக்கல் செய்ய இயலவில்லை என்று கூறி தாக்கல் செய்துள்ள இம்மனுவினை சட்டப்படி அனுமதிக்க இயலாது என்று வாதிட்டு மாண்புமிகு உயர்நீதிமன்ற முன்தீர்ப்புகளை சுட்டிக்காட்டியுள்ளார்.

**9)** இரு தரப்பு வாதுரையிலிருந்தும், வழக்காவணங்களின் பரிசீலனையில் இருந்தும், இம்மனுவானது மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் வழக்கறிஞரால் மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக 25.10.2021ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவினை ரத்துச் செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில்

25.10.2021ம் தேதியில் மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு சார்பு செய்யப்பட்டிருந்த நிலையில் மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் வழக்கில் ஆஜராக மனுதாரரான வழக்கறிஞருக்கு வக்காலத்தினை வழங்கி இருந்ததாகவும், ஆனால் 25.10.2021ம் தேதியில் மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளின் வருகைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் 25.10.2021ம் தேதியில் பார் கவுன்சில் ஆப் தமிழ்நாடு நீதிமன்ற புறக்கணிப்பை அறிவித்திருந்ததால் மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் மனுதாரரான வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராகி வக்காலத்தினை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், மேலும், மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் வெளியூர் சென்றிருந்த காரணத்தால் அவர்களையும் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று தகவல் தெரிவிக்க இயலாத காரணத்தாலும், 25.10.2021ம் தேதியில் இ.ம.எண்.02/2021 மனுவில் மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகாத காரணத்தால் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

10) எதிர்மனுதாரர் / மனுதாரர் / வாதி தரப்பில் 25.10.2021ம் தேதியில் மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளின் வருகைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் வழக்கறிஞர்கள் நீதிமன்ற புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்ததால் மனுதாரரான வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராகி வக்காலத்தினை தாக்கல் செய்ய இயலவில்லை என்று கூறியுள்ள காரணமானது சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும், 25.10.2021 தேதியில் மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் வெளியூர் சென்றிருந்தார்கள் என்பதை மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் என்றும், 25.10.2021ம் தேதியில் இ.ம.எண்.02/2021 மனுவில் மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைப்பட்ச உத்தரவினை ரத்து செய்வதற்கு எந்த ஒரு

நியாயமான ஏற்றுக்கொள்ளத்தக்க காரணத்தையும் கூறாமல், மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

11) ஒப்புக்கொண்டுள்ளவாறு மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் சார்பாக வழக்கறிஞரே மனுதாரராக இருந்து பிரமாண பத்திரத்தையும், மனுவையும் தாக்கல் செய்துள்ளதாக தெரியவருகிறது.

12) எதிர்மனுதாரர்கள் / மனுதாரர்கள் / வாதி தரப்பில் வழக்கறிஞரே பிரமாணதாரராகவும், வழக்கறிஞராகவும் இருந்து ஒரு மனுவினை தாக்கல் செய்ய இயலாது என்று கூறி

13) 1989 (1) MLJ 475 என்ற சட்ட இதழில் பிரசுரம் ஆகியுள்ள V.P.Nagarajan Vs Prabhavathi என்ற வழக்கில் In support of the application I.A.No.858 of 1986 , an affidavit was filed by the learned Counsel for the petitioners. It is very distressing to note that counsel not only filed the affidavit in support of the application but also signed the application as advocate for petitioners.

The Bar Councils of India has framed rules under Section 49(c) of the Advocates Act, 1961 Rule 13 in Chapter V in part III of the rules reads thus

The advocate who files an affidavit in court has no right to assume that his ipse dixit will be accepted by the court automatically without any security. Particularly when the opposite party challenges the correctness or truth of the averments in the affidavit, it is the paramount duty of the advocate who is the deponent of the affidavit to produce the best evidence to prove the contents of the affidavit என்று நமது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

14) மேலே குறிப்பிடப்பட்டுள்ள நமது மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் முன் தீர்ப்பின் அடிப்படையில் பார்க்கும்போது இவ்வழக்கிலும், தரப்பினர்களின் வழக்கறிஞரால், பிரமாணதாரராகவும், வழக்கறிஞராகவும் இருந்து இம்மனு

தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற நிலையில், மனுவானது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

15) மேலும், இவ்வழக்கானது ஏற்கனவே வாய்தா ஏற்படுத்தப்பட்டுள்ள வழக்கு இல்லை. முதன் முறையாக மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளின் வருகைக்காக நிர்ணயிக்கப்பட்ட வழக்காகும். 25.10.2021ம் தேதியில் இ.ம.எண்.02/2021 மனுவில் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் ஆஜராக அறிவிப்பு அனுப்பட்டு, மேற்படி அறிவிப்பு சார்பு செய்யப்பட்டிருந்த நிலையில் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால், அவர்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

16) மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண பத்திரிக்கையில் 25.10.2021ம் தேதியில் வழக்கறிஞர்கள் நீதிமன்ற புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்த காரணத்தால் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராகி வக்காலத்தினை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் வெளியூர் சென்றிருந்த காரணத்தால், அவர்களுக்கும் நீதிமன்றத்தில் ஆஜராக தெரிவிக்க இயலவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

17) ஆனால், 25.10.2021ம் தேதியில் மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் வெளியூர் சென்றிருந்ததை நிரூபிக்கும் வகையில் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. அது தொடர்பாக மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் பிரமாண பத்திரிக்கையும் தாக்கல் செய்யப்படவில்லை. வழக்கறிஞர்கள் நீதிமன்ற புறக்கணிப்பில் ஈடுப்பட்டிருந்த காரணத்தால், மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் சார்பில் வக்காலத்து தாக்கல் செய்யவில்லை என்று கூறி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ள

நிலையில் கற்றறிந்த எதிர்மனுதாரர் / வாதி தரப்பு வழக்கறிஞரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள

18) 2016(1) MWN (Cr) DCC 34 (Mad.) என்ற சட்ட இதழில் பிரசுரம் ஆகியுள்ள Ajay Kumar Bisnoi Vs KEi Industries Limited என்ற வழக்கில் Advocate Act. 1961 (25 of 1961) – Professional Ethics – " Professional Misconduct " – Failure of Advocates to attend Courts on ground of boycott calls / Strikes, etc. – Amounts to breach of contract, breach of trust and professional misconduct – Obstructs process of Court to secure justice and results in failure of administration of justice – Procedure to be followed by Courts upon Such non – appearance – Remedies available to litigants for not representing matter in Court Directions / Guidelines issued.

In Such circumstances, the Court below is at liberty to proceed in accordance with law.

Failure of Lawyer to attend to his case in Court would not only be breach of contract and breach of trust, but also professional misconduct. In such circumstances, this court feels it appropriate to make the following:

(i) No Advocate has right to stall the Court proceedings on the ground that Advocates have decided to Strike or to boycott the Courts or even boycott any particular Court. With the strike by the lawyers, the process of Court intended to secure justice is obstructed which is unwarranted under the provisions of the Advocates Act;

(ii) It is always open to the litigants to claim damages and also to move the Consumer forum for appropriate compensation and for damages that had caused to them by theirs Advocates by not representing the matters in Courts;

(ii) No Advocate shall be permitted to represent the matter without robes (dress–code) on boycott day;

(iii) The Courts below shall record the non–appearance of the Advocates due to boycott in the listed case proceedings and proceed with the matters on merits;

(iv) After recording such non–appearance of the Advocates, the Courts below shall report

the same to the Bar Council of India for appropriate action and it would facilitate the litigants to pursue the matter with the Bar Council of India.

The Registry is directed to issue a copy of this order to all the subordinate courts dealing with Civil and criminal matters. என்று நமது மாண்புமிகு உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. மேற்படி முன்தீர்ப்பில் பிறப்பிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படி நீதிமன்ற புறக்கணிப்பு என்பது சரியென்று காட்டமுடியாத செயல் என்ற நிலையில் அதனை காரணமாக குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ள இம்மனுவானது சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்பதாலும், மனுவில் கூறப்பட்டுள்ள காரணமும் சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்பதாலும், நீதியின் நலன் கருதி இம்மனுவினை தள்ளுபடி செய்யலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**19)** முடிவாக, இம்மனுவானது செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, பின்னர் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2021ம் ஆண்டு டிசம்பர் மாதம் 01ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/-(G.ஆனந்தி)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**<u>மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>**

– இல்லை. –

**<u>எதிர்மனுதாரர் / வாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>**

– இல்லை –

ஒப்பம்/-(G.ஆனந்தி)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

-----------------------------------

**அசல் / வரைவு ஆணையுரை**

ஓ.எஸ்.279/2021

இன்

இ.ம.எண்.2/2021

இன்

இ.ம.எண்.03/2021

நாள் : 01.12.2021

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

-----------------------------------